

பார்வர்ட் ஆர்ட் பிலிம்ஸ்

நல்ல தங்கை

நடிப்பவர்கள்

M. N. நம்பியார்	கைலாசம்
T. S. பாலையா	ராமு
S. A. நடராஜ்	சுந்தர்
V. M. ஏழுமலை	நல்லண்ண பிள்ளை
A. கருணாநிதி	மரிக்கொழுந்து
T. P. பொன்னுசாமி பிள்ளை	வேலு பிள்ளை
புளிமூட்டை ராமசாமி	கணபதி பிள்ளை
K. சாயி ராம்	கணக்கு பிள்ளை
C. K. சௌந்தர்ராஜன்	தர்மு
M. M. A. சின்னப்பா	சீனு
T. R. நடராஜன்	பாவாடை

P. K. ராகவன், D. K. சின்னப்பா, T. A. நடராஜன் மணி, C. R. ராஜு, S. A. மணி மற்றும் பலர்

மாதுரிதேவி	மோகனா
P. R. சுலோசனா	சுகுணா
C. R. ராஜகுமாரி	வனஜா
M. S. S. பாக்கியம்	மனோரஞ்ஜிதம்
K. சாந்தாதேவி	ரங்கம்மா
S. K. வேணுபாய்	கோதை அம்மாள்

S. N. லக்ஷ்மி, லலிதா, புஷ்பா மற்றும் பலர்

நடனம்: குமாரி சுசீலா

நடன அமைப்பு: P. S. கோபால கிருஷ்ணன்

A. K. சோப்ரா

சங்கீதம்: G. ராமனாதன்

வாத்திய கோஷ்டி: G. ராமனாதன் பார்ட்டி

நல்ல தங்கை

கதைச்சுருக்கம்

படித்துப் பட்டம் பெற்றவள் தமக்கை மோகனா. பட்டிக்காட்டில் வளர்ந்து பண்புடன் நடப்பவள் நல்லதங்கை சுகுணா. தாயை இழந்த இரு சகோதரிகளும் தகப்பனார் நல்லண்ண பிள்ளை ஆதரவில் நல்லூர் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். மூத்தபெண் மோகனாவுக்கும் கல்லுப்பட்டி மிராஸ்தார் வேலுப்பிள்ளை மகன் கைலாசத்திற்கும் கல்யாண நிச்சயதார்த்தம் நடக்கிறது. படித்த மோகனா தனக்கு வரும் மாப்பிள்ளை நாகரீகம் படைத்தவனாய் இருப்பான் என்று எண்ணி ஆடிப்பாடி மகிழ்கிறாள். ஆனால் இதற்கு நேர்மாறான படிப்பில்லாத முட்டாளான மாப்பிள்ளை என்பதைதெரிந்தவுடன் தகப்பனிடம் கல்யாணத்தை நிறுத்தச் சொல்லுகிறாள். தகப்பனார் கலங்குகிறார். தங்கை தமக்கைக்கு புத்திமதிகளைச் சொல்லி உன் படிப்பைக்கொண்டு உனக்கு வரும் மாப்பிள்ளையை புத்திசாலியாக மாற்றமுடியாதா? அதற்கு திறமையில்லையா என்று பலவித நல்ல புத்திமதிகளைச் சொல்லி தமக்கையை கல்யாணத்திற்கு சம்மதிக்கச் செய்கிறாள். கைலாசத்திற்கும் மோகனாவிற்கும் கல்யாணம் நல்லமுறையில் நடக்கிறது. மோகனா மாப்பிள்ளை வீட்டில் நல்ல முறையில் இருந்து வருகிறாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தன் கணவன் கைலாசத்தை படிப்பாளியாக்க பாடுபட்டு வருகிறாள். படிப்பில்லாத தங்கை சுகுணாவிற்கு பட்டணத்திலிருந்து ஒரு படித்த மாப்பிள்ளை சம்பந்தம் ஏற்படுகிறது. படித்த சுந்தருக்கும் படிப்பில்லாத சுகுணாவுக்கும் திருமணம் நடக்கிறது. மாப்பிள்ளையுடன் சுகுணா பட்டணத்திற்கு செல்கிறாள். சுகுணாவின் கணவன் சுந்தருக்கு தாய் தகப்பன் இல்லை என்றாலும் சிறிய தகப்பனார் சிறிய தாயார் ஆதரவில் ஏராள ஆஸ்தி அந்தஸ்தில் இருக்கிறான். இருந்தாலும் ராமு—சீனு என்னும் இரண்டு நண்பர்களின் தொடர்பால் சுந்தர், வனஜா என்ற நடனக்காரியின் கண் வலையில் மயங்கி வீட்டிற்கு வேளாவேளைக்கு செல்லாமல் வனஜா வீட்டில் காலம் கழிக்கிறான். மருமகள் சுகுணாவின் நிலை கண்டு சுந்தரின் சிறிய தகப்பன் சின்னம்மா இருவரும்

கண்கலங்குகின்றனர். ராமு, சீனு இருவரும் சுந்தருக்கு துற்போதனை செய்து சொத்தில் பாகப் பிரிவினை தேவை என்று சித்தப்பாவிடம் கேட்கச் சொல்லி அனுப்புகின்றனர். அதேபோல் சுந்தர் சித்தப்பாவிடம் சண்டை போட்டு இரண்டு லக்ஷ ரூபாய் வாங்கிப்போய் பேங்க் ஆரம்பிக்க ராமுவுடன் முடிவு செய்கிறான். சுகுணா தன் நிலை புரியாமல் தினமும் எண்ணி எண்ணி ஏங்குகிறாள். சுகுணாவிற்கு வாசுகி என்ற உபாத்தியாயினியை வைத்து எழுதப் படிக்க கற்றுக் கொடுக்கிறான் சுந்தர். வீட்டை மறந்து வனஜாவிடம் மெய்மறந்து இருந்தாலும் சுந்தருக்கு சுகுணாவிடம் ஒரு பயம் அன்பு இரண்டும் வேரூன்றிக்கிடந்தது. இதற்கிடையே சுந்தர், வனஜா காசுக்காகத்தான் நேசிக்கிறாள் என்ற உண்மையை அறிந்து வீட்டை விட்டு வெளியேறி தன் வீட்டில் நுழையும் தருணம் தன் மனைவி தன்னை நினைத்து வருந்துவதைக் கண்டு மனம் திருந்துகிறான்.

பட்டிக்காட்டிலிருந்த் கைலாசம் மோகனாவின் முழு முயற்சியால் படிப்பாளியாகி பட்டணத்திற்கு சுகுணாவைப் பார்க்க கைலாசம் மோகனா, வேலையாள் மரிக்கொழுந்து, வேலையாளின் மனைவி மனோரஞ்சிதம் அனைவரும் புறப்படுகின்றனர். ஒருநாள் ராமு கெட்ட எண்ணம்கொண்டு சுகுணாவிடம் போய் தகாத வார்த்தைகளைப் பேசி தகுந்த பாடம் கற்றுக்கொண்டு திரும்புகிறான்.

சென்னை வந்த கைலாசம் மோகனாவை சுந்தர் சுகுணா வரவேற்று ஆனந்தமடைகின்றனர். மோகனா பட்டணத்தை சுற்றிப் பார்க்க சுந்தர் மேனேஜர் ராமுவுடன் புறப்படுகிறாள். சுகுணா ராமுவுடன் மோகனா புறப்படுவதை தடுக்கிறாள். கேட்காமல்புறப்படுகிறாள். சுந்தர் சுகுணாவின் உபாத்தியாயினி நடத்தும் மகளிர் இல்லத்தின் கட்டிட வேலையை முடிக்க வேண்டுமென்று சுகுணாவின் வற்புறுத்தலுக்கிணங்க சுந்தர் சதா அதே வேலையாக அலைகிறான். பட்டணம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த மோகனா தன் தங்கையும் தன் கணவனும் களங்கமில்லாது பேசிக்கொண்டு இருப்பதைப் பார்த்து தப்பபிப்ராயம் கொள்கிறாள். தன் தங்கையை கோபித்து கன்னத்தில் அறைகிறாள். அதற்கு பலன் உடன் கைலாசத்திடம் மோகனா அறைவாங்குகிறாள். மற்றும் எமது திரை சொல்லும்.

மோகனா, சுகுணா

பாடல்: கா. மு. ஷரீப் குரல்: ஜிக்கி & லீலா

மோகனா: என்னைப்போலே பாக்யசாலி
இனியாரே உலகிலே?
எண்ணம் போல் யாவுமே
வாழ்வில் தினம் தினம் நடந்தே
இன்பமே எய்துதே என் மனம்
மிக மகிழ்ந்தே
இணையாரே உலகிலே?
அழகோடு அன்பும் வாய்த்தவர் தானே
துரையென வந்தே மாலை சூடிடுவரோ!
சுகம் பெறுவேன் என்றும் மகிழ்வாக
ஆடுவேன்! பாடுவேன்! ஆங்கிலம்
தனைக் கலந்தே
பேசுவேன்; பேசுவார்; ஜாலியாய் மனம் மகிழ்ந்தே
இனியாரே? உலகிலே

சுகுணா: உந்தன்.......
மனம்போல வாழ்வில் வந்திடுவாரே
விரும்பியதெல்லாம் காணும் நீ பெறலாமே!
இருவருமே என்றும் பிரியாது
அன்புடன் இன்பமாய் நாளும் குணமுடன்
நடந்தே
ஆனந்தம் பொங்கவே வாழுவீர் நலம் நிறைந்தே
இனியாரே உலகிலே
உன்னைப்போலே பாக்யசாலி
இனியாரே உலகிலே.........?

நலுங்கு பாட்டு

பாடல்: அ. மருதகாசி குரல்: லீலா & ரத்னமாலா

பெண்வீட்டார்: மாப்பிள்ளே! மக்கு
மாப்பிள்ளே! நம்ம
மாப்பிள்ளே

மா மரத் தோப்பிலே
மாடு மேய்க்கும் ஆம்பளே!
குப்பை — வண்டியோட்ட........
கட கடா
கட கடா
கட கடா........
குப்பை—வண்டியோட்ட லாயக்காக
வந்து வாச்ச மாப்பிள்ளே! (மாப்
காப்புக் கடுக்கன் அடகு வச்சு
காப்பி வாங்கிக் குடிப்பார்! செட்டி
கடைக்குப் போயி கடன் வாங்கி
சீட்டு ஆடித் தோற்பார்.
கூப்பன் எழுதி காசையெல்லாம்
கோட்டை விட்டுத் திரிவார்!
பாப்பராகி பாண்டிச்சேரி
பக்கம் ஓடிப் போவார்........... (மாப்)

பிள்ளைவீட்டார்: நாட்டுப் பொண்ணு!...நவ
நாகரீக கண்ணு!
மேனாட்டிலே வாழும்
சீமாட்டி போல் பேசும்
வாயாடியாய் வந்து வாச்சுதம்மா இது
ஆட்டம் ஆட ஆரம்பிச்சா
கோட்டை கொத்தளம் தவிடு பொடி
பாட்டுப் பாட வாய்திறந்தா
காது செவிடு ஆகுமடி!
சாட்டைபோல ஜடையுமில்லே
சாண் அளவு பின்னலடி—கொஞ்சம்
ஜாக்ரதையா இல்லாவிட்டால்........
அண்ணு பாடு ஆபத்துடி ..... (நாட்டு)

பெண்வீட்டார்: பெண்சாதி தன்னை இவர் திண்டாட
விடுவார்
பித்தாகி தாசி மனைத்தேடிப் போவார்
காலில் வீழ்வார்

குண்டோதரன் கூட சாப்பாட்டிலே இந்த
சோமாளிக் கீடாக மாட்டானடி!
மண்டூகம்! என் சுவடி வாய்ப்பாடு என்றால்
...............இந்த............ ... (மண்டூகம்)
மணி என்ன விலை யென்று கேள்விகேட்பார்
ஆந்தைப்போல் முழிப்பார்!
வந்தாரடி நம்ம மாப்பிள்ளையாய்
வாலு இல்லாத கிஷ்கிந்தை வாசி இவரே!....

பிள்ளைவீட்டார்: பட்டுக் கட்டும் ஒய்யாரி!
புட்டா மாவு சிங்காரி!
தட்டுக்குத்தான் சேதம் இந்த சுந்தரி!
....இது..............
வெக்கம் மானம் இல்லாமெ
வேலே வெட்டி பார்க்காமே
பக்கம் வந்து அண்ணாகிட்ட
பல்லேப் பல்லேக் காட்டுமே!
அதிகம் படிச்சு விட்ட தெம்பு—நம்ம
அண்ணா கிட்ட பேசுமடி வம்பு! இதன்
அட்டகாசத்தை—அவர்
மட்டந்தட்டுவார்
அஞ்சமாட்டார்! கொஞ்சமாட்டார்
மிஞ்சாதே அம்மாளு.........!

வாழ்த்துக்கள்: சந்தான பாக்கியமும்
சகல சுக போகம்
உண்டாக வாழ்த்துகிறோம்!
வாழி நலம் சூழ! வாழி நலம் சூழ!

கைலாசம் — மரிக்கொழுந்து

பாடல்: **அ. மருதகாசி** குரல்: திருச்சி **லோகநாதன்**
சீர்காழி **கோவிந்தராஜு**

கைலாசம்: ஏ. பீ. ஸி. டி. படிக்கிறேன்
ஈ. எப். ஜி. எச். எழுதுகிறேன்

ஆல்பீஸர் போல நடிக்கிறேன் – என்
ஹஸபண்டு சொன்னதுபோல
செய்யறேன்

மரிக்கொழுந்து: ஏன் இந்த படிப்பு நமக்கு? இதில்
என்ன நன்மை இருக்கு?
ஆம்பளை, பொம்பளை சொல்லைக்
கேட்பதா?
அவமானமாக இருக்கு! நினைச்சா
அவமானமாக இருக்கு!

கைலாசம்: பத்தாம் பசலி மனுஷனாகவே
பட்டிக் காட்டிலிருந்தேன் — பணம்
பெட்டிக் காத்துக் கிடந்தேன்.
படிச்ச ஹஸபண்டல் நாகரீகமும்
படிப்பும் தெரிஞ்சுக்கிட்டேன் — எஸ்நோ
பாஷையும் புரிஞ்சுக்கிட்டேன்.

மரிக்கொழுந்து: மெத்தப் படித்தவர் போலே நீங்க
வெளுத்து வாங்குறீங்க — அண்ணே
வேஷம் போடுறீங்க!
வெத்து வேட்டுகள் விடவேணுங்க
அர்த்தம் என்னுங்க?.......எஸ்...நோ
அர்த்தம் என்னுங்க?

கைலாசம்: பட்டிக் காட்டு கண்ட்ரீ ப்ரூட்டு
படிச்சிருந்தா தெரியும் — நீ
படிச்சிருந்தா தெரியும்

(வசனம்) ஜிங்க்லீ பீஸ் பாஷையில் 'எஸ்' ஸுக்கு
இல்லை என்றும் ''நோ''வுக்கு சரி
என்றும் அர்த்தம்.

மரிக்கொழுந்து: அர்த்தம் அனர்த்தம் எல்லாம் தெரிஞ்ச
அறிஞராயிட்டீங்க அண்ணே
அறிஞராயிட்டீங்க!
............ஆனல்..........
அதிகம் படிச்ச பெண்ணைக் கட்டியே

அடிமை ஆயிட்டீங்க—மூளேயே
அடகு வச்சுட்டீங்க!

கைலாசம்: அட.........
இடியட்டு நீயும் பெண்ணைப்பத்தி
எடவெட்டுப் பேசாதே! எங்கிட்டே
அடிபட்டு சாகாதே! நமக்கு
இட்லி சாம்பார் இன்பம் சைல்டு
எல்லாங் குடுப்பவ பொண்ணு
அவதாண்டா நமது கண்ணு!

மோகனு—கைலாசம்
கனவு பாட்டு

பாடல்: அ. மருதகாசி குரல்: திருச்சி லோகநாதன் & ஜிக்கி

மோகனு: அறிவுள்ள அழகன் என் மணவாளனுக
அமைந்திருந்தால்
அமைதியே இல்லாது என் மனம் தடுமாறி
அலேமோதுமோ?

பெண்: இந்த வாழ்வே சொந்தமானுல்—அழியா
இன்ப லோகம் காணலாம்.

ஆண்: விந்தை மேவும் காதல் வானில்—இரண்டு
வெள்ளியாக மின்னலாம்! (இந்த)

பெண்: வாழுங்காலம்! வாலிப காலம்! வீணுகலாமோ
வாழ்வில் உருண்டோடும் நாள் மீளுமோ?

ஆண்: வண்டு மறவாது ரோஜாவை! தேவியே!
மனம் வாடாதே! வாராய் சஞ்சீவியே!

பெண்: மண்மீதிலே எந்நாளுமே!
ஆண்: மாறுதினி இந்த ஆனந்தமே!
பெண்: என்னுசை ராஜா........
ஆண்: என்னுசை ராணி
தெய்வீகக் காதல் ஓவியம்

பெண்: தேனூறும் இன்பக் காவியம்......
ஆண்: தெய்வீகக் காதல் ஓவியம்...........
பெண்: மனம் போல வாழ்வும் ஆனதே
மாறாத இன்பம் சேர்ந்ததே......
(என்னாசை ராஜா)

வண்டிப்பாட்டு

பாடல்: K. P. காமாக்ஷிசுந்தரம்
குரல்: T. M. சௌந்திரராஜன் & பார்ட்டி

வண்டிக்காரன்: கல கல வென்றே சாலையில் ஓடும்
காளைகளைப் பாராய்—என்
காளைகளைப் பாராய்.
கல்யாணப் பெண்ணும் மாப்பிள்ளையும்
மனம் களிக்கிறார்கள்—ஜோராய் (கல)

உழுது நட்டிடும் பயிர்களைப்போலே
உயரம் ஓங்கிடவே
உணவில்லாமல் வருந்திடு மக்கள்
துயரம் நீங்கிடவே
வளருமே கலை கண்ணகி மதுரை
மங்கம்மாள் செயல் போலே
மாநில மீதினிலே.......
மகிழ்ந்திடவே
உயர்ந்திடவே
புகழ்ந்திடவே............ (கலகல)

இல்லறமே மிகும் நல்லறமாகும்தானே
என்ற நீதியை வள்ளுவன் வகுத்தான்தானே
அந்த நல்லவர் சொல்லை நம்பி வாழ்வது
நம்மவர் கடமைதானே
நானிலம் வாழ்ந்திடவே.........
உயர்ந்திடவே.........
மகிழ்ந்திடவே........
புகழ்ந்திடவே....... (கலகலவென்றே)

வனஜா டான்ஸ் பாட்டு

பாடல்: அ மருதகாசி குரல்: T. V. ரத்னம்

ஓ......மோனே.......
திரும்பிப் பார்க்கும் ராஜா!
சிரித்துப் பேசும் ரோஜா—இதை
விரும்பி ஏங்க வேண்டாம்! வெறும்
வாயை மெல்ல வேண்டாம் (ஓ)
அப்பாவி மண்டு வெறும்
கப்பாசை கொண்டாலே
தப்பாத்தான் போகுங்க—குறி
தப்பாத்தான் போகுங்க!...இந்த
சிப்பாயி வைக்கும் குறி
துப்பாக்கிக் குண்டு—அது
எப்போதும் தப்பாதுங்க!...வச்சகுறி
எப்போதும் தப்பாதுங்க
மைனர் ரொம்ப ஜாலி
மணிபர்ஸ் மட்டும் காலி!
பெண்கள் தம்மைக் போலி
போவ தொன்றே ஜோலி!
திரும்பிப் பாரு ராஜா
சிரித்துப் பேசும் ரோஜா!
கரும்பைப் போல இனிக்கும்—மெய்க்
காதல் இன்ப மளிக்கும்!

தெருப்பாட்டு

பாடல்: குரல்: T M. சௌந்திரராஜன்

துயில் நீங்கி எழுந்திடுவாள்
தூபம் கொளுத்திடுவாள்
உயிரான கணவன் பதம்
உளம் மகிழ்ந்து தொழுதிடுவாள்
உத்தமப் பொண்ணு—அவள்
பத்தினிக் கண்ணு

வாசல் மனே பெருக்கி
மாக்கோலம் போட்டிடுவாள்
பாசி அறப் பாத்திரங்களைப்

பக்குவமாய் துலக்கிடுவாள்
பாரதப் பொண்ணு
ஆசாரத்தில் கண்ணு

ருசியுள்ள கறி வகைகள்
நொடிப்பொழுதில் சமைத்திடுவாள்
உசிதம் போல உண்பவர் தம்
உளம் அறிந்து உபசரிப்பாள்
உயர் குலப் பொண்ணு
நல்ல செயலடி கண்ணு.

பூஜை மிகச் செய்திடுவாள்
புண்ணியங்கள் தேடிடுவாள்
வாசமலர் தூவி என்றும்
வல்லானை வணங்கிடுவாள்
மறக்குலப் பொண்ணு— தமிழ்
மக்களின் கண்ணு.
கணவனின் குற்றங்களை
கணப்போதில் மறந்திடுவாள்
குணத்தாலே வசப்படுத்தி
குடும்பத்தை விளங்கச் செய்வாள்
குலநலப் பொண்ணு—இந்த
உலகத்தின் கண்ணு.
வீட்டிலுள்ள குறைபாட்டை
வெளியிடவே மறுத்திடுவாள்
காட்டு வெள்ளம்போல் எவர்க்கும்
கருணை மிகச் செய்திடுவாள்
நாட்டுக் கேற்ற நங்கை
அவள் பேரு நல்ல தங்கை

சுகுண

பாடல்: கா. மு. ஷெரீப் குரல்: ராதா ஜெயலட்சுமி

தேனே பாகே தெவிட்டாத தெள்ளமுதே
வானச் சுடர்களுக்கும் சுடாளிக்கும் நற் சுடரே
கானப் பயிரெனவே கருகுகின்றேன் இரவு பகல்
ஈனப் பிறவியென எண்ணிவிட்டாய் எனை வெறுத்தாய்
ஏன் வெறுத்தாய்

கனியாதா——மனம் கனியாதா
கலங்கும் மனத்துயர் தீராதா
என் நிலை கண்டும்
குருபரனே திருமாலின் மருகனே
குறமாதின் மனம் மகிழ் வேலோனே
குறைதீர ஆண்டருள் சீமானே
பிழை ஏதும் புரிந்திலேன்
என் நிலை கண்டு
கனவிலும் உனைநான் மறந்தறியேனே
கைவிட்ட போதும் தினம் தொழுது நிற்பேனே
அனலிடு மெழுகாய் ஆகி நொந்தேனே
ஐயனே வையகம் காக்கும் பூமானே
பெருந்துயர் அடைந்திட விடுவதும் வீணே
இரக்கந்தான் இல்லையோ சொல் முருகோனே
பிழை ஏதும் புரிந்திலேன்
என் நிலை கண்டு

பாடல்: **பாரதியார்** குரல்: G; **ராமநாதன்**

கூலி மிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தான் மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா நீ நேற்றைக்கு இங்கு வரவில்லை என்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்
வீட்டிலே பெண்டாட்டி மேல் பூதம் வந்ததென்பார்
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரெண்டாம் நாளென்பார்
உள் வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்பலத்துரைப்பார்
என் வீட்டில் இல்லை என்றால் எங்கும் முரசறைவார்
சேவகராற்பட்ட ஸ்ரமம் மிகவுண்டு கண்டீர்!
சேவகரில்லா விடிலோர் செய்கை நடக்கவில்லை
ஈங்கிவற்றால் நானும் இடற் மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான்! இடைச்சாதி நான் என்றான்.
மாடு கன்று மேய்த்திடுவேன், மக்களை நான்
காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்கு சிங்காரப் பாட்டிசைத்து
அழாதபடி பார்த்திடுவேன்.
காட்டு வழியானாலும், கள்ளர் பயமானாலும்

இரவிலே எந்நேரமானாலும் தேவரீர் தம்முடனே
கற்றவித்தை எதுமில்லை காட்டு மனிதன் [சுற்றுவேன்
ஐயே! என்று பல சொல்லி நின்றான்
"எது பெயர் கூறு" என்றேன் "ஒன்றுமில்லை
கண்ணன் என்பார் ஊரிலுள்ளோர் என்னை" என்றான்
கட்டுறுதியுள்ள உடல், கண்ணிலே நல்ல குணம்
ஒட்டுறவாய் உறைத்திடுஞ்சொல், ஈங்கிவற்றால்
தக்கவனென்றுளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்
மிக்கவுரை பல சொல்லி விருது பல சாற்றுகிறாய்
கூலி என்ன கேட்கின்றாய் கூறு? என்றேன்.
ஐயனே! தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிகள்
எதும் இல்லை
நானோர் தனியாள் நரைதிரை தோன்றா விடினும்
ஆன வயதிற்களவில்லை ஆதரித்தார் போதும் எனை
நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு காசு பெரிதில்லை
என்றான்
பண்டைக் காலத்து பைத்தியத்திலொன்றெனவே கண்டு
கண்ணனை நான் ஆளாக கொண்டுவிட்டேன்
நாளாக நாளாக கண்ணனுக்கு நம்மிடத்தில் பற்று
மிகுந்து வரல் பார்க்கின்றேன்
கண்ணனால் பெற்றவரும் நன்மையெல்லாம் பேசி
கண்ணை இமை இரண்டும் காப்பதுபோல் [முடியாது.
என் குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான்.
வீதி பெருக்குகின்றான்' வீடு சுத்தமாக்குகின்றான்.
தாதியர் செய் குற்றமெல்லாம் தட்டியடக்குகின்றான்
நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் 'இடைச்சாதி நான் என்றான்
இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்
கண்ணனை ஆட்கொண்டேன், நான்
கண் கொண்டேன்; கண் கொண்டேன்
கண்ணனை ஆட்கொள்ள காரணம் உள்ளனவே
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்
……கண்ணன்……
எங்கிருந்தோ வந்தான்.

கதை,வசனம்: A. P. நாகராஜன்

பாடல் இயற்றியவர்கள்:

K. P. காமாட்சி சுந்தரம், கவி. கா. மு. ஷெரீப்

A. மருதகாசி, லட்சுமணதாஸ்.

குரல் கொடுத்த பின்னணி பாடகர்கள்:

திருச்சி லோகநாதன், G. ராமநாதன்

சீர்காழி கோவிந்தராஜன், T. M. சௌந்திரராஜன்

T. V. ரத்தினம், கிருஷ்ணவேணி (ஜிக்கி), P. லீலா

ராதா ஜெயலட்சுமி, A. ரத்னமாலா,

U. R. சந்திரா, ஆண்டாள்.

டைரக்ஷன்: S. A. நடராஜ்.

உதவி: C. L. ராஜாராம், S. ராஜேந்திரன்

ஒளிப்பதிவு: J. G. விஜயம்,

உதவி: V. கிட்டன், C. V. ராஜகோபால்

ஒலிப்பதிவு: C. V. ராமசாமி B. A.

உதவி: K துரை, C P நடராஜன்

எடிடிங்: T. விஜயரங்கம்

உதவி: M ஷண்முகம், துரைராஜ்

லேபரேட்டரி: C A சுந்தர்ராஜன்

ஆர்ட்: M குட்டியாப்பு, பொன்னுசாமி

உதவி: வெங்கட்ராமன், குட்டியாப்பு, சீனிவாசன்

மேக்கப்: சங்கர்ராவ் நிபாத்கர், ராகவ், சுடலை

உடை: T A மாதவன்

புரடக்ஷன் நிர்வாகம்; G மணி (ஸ்டுடியோ)

R. P. சீனிவாசன் (F. A. F.)

தயாரிப்பு: பார்வர்ட் ஆர்ட் பிலிம்ஸ்

ஸ்டுடியோ ஸெண்ட்ரல், கோவை.

எமது அடுத்த வெளியீடு!

★

'அண்ணன் தம்பி'

கதை–வசனம்: S. D. சுந்தரம்.

★

தயாரிப்பு:

பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ்

ஸ்டுடியோ: செண்ட்ரல், கோவை.

PRINTED AT THE JEWEL PRESS, COIMBATORE.